பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 23 | பங்குனி 25 | ஜ. ஆகிர் 1 | இதழ் 56
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 7 - 4 - 81

## சந்தேக நபர்கள் கொழும்பில் விசாரணை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு நேற்றுப் பிற்பகல், விமானப்படையின் விசேஷ விமானத்தில் அழைத்துவரப்பட்ட வடபகுதி கொள்ளை-கொலைச் சம்பவங்களின் மூன்று சந்தேக நபர்களுடன், மற்றுமொரு சந்தேக நபரும்கூட இருந்தார்.

'குணம்' என்று அழைக்கப்படும் இவர், முன்னர் 'அவ்ரோ' விமான எரிப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டவராகும். இவர்கள் கொழும்பில் விசாரணை செய்யப்படுவார்கள்.

★ சந்தேக நபர்களின் புலன்விசாரணையில் புதிய தகவல்கள்:

# வெளிநாட்டில் தனி இயக்கம்; பயிற்சியும் பெறுகின்றனராம்

## "தமிழ் தலைவர்களுடன் தொடர்புகள் கிடையாது"

### வடபகுதி கொள்ளை-கொலை சம்பவம் பற்றியும் பிரஸ்தாபம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் பருத்தித்துறை தொகுதியிலுள்ள மணற்காடு எனுமிடத்தில், கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களின் புலன்விசாரணையிலிருந்து, பல தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைத்திருப்பதாக பொலிஸ்வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இத்தகவல்கள்; கடந்த சில வருடங்களாக வட பகுதியில் நடைபெற்ற பல கொள்ளை - கொலைச் சம்பவங்களின் பின்னணியைதெளிவுபடுத்தியுள்ளன என்று நம்பிக்கை தெரிவிக்கும் பொலிஸ்வட்டாரங்கள், விரைவில் மேலும் பலரைக் கைது செய்ய புதிய தகவல்கள் உதவியாக உள்ளன என்றும் தெரிவித்தன.

கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்கள் புலன்விசாரணை செய்யப்பட்ட போது; வெளிநாட்டில் குறிப்பிட்ட ஒரு தொகையினரான தமிழ் இளைஞர்கள் ஒரு 'இலட்சியத்' துக்காகபயிற்சி பெற்றுவருவதாகவும்; இதில் தமிழ் அரசியல் தலைவர்களுக்கோஅல்லது இங்குள்ள எந்த இயக்கங்களுக்கோ எவ்வித தொடர்பும் கிடையாதென்றும், தமிழ் இளைஞர்கள் சிலர் தங்களது சொந்த விருப்பப்படியே தனியாக ஒரு இயக்கத்தை வெளியே நடத்திவருகின்றனர் என்றும் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. இப்புலன்விசாரணையில், குறிப்பிட்ட இரண்டு நாடுகளின் பெயர்களும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதாம்

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான குட்டிமணி, தங்கத்துரை, தேவன் ஆகியோர் நீண்டநேரமாக பலத்த பாதுகாப்பின் மத்தியில் புலன்விசாரணை செய்யப்பட்டபோதே மேற்கண்ட தகவல்கள் தெரிய வந்ததாக கூறப்பட்டது.

### 16 சம்பவங்களில் தொடர்புண்டாம்

வடக்கில் நடைபெற்ற பல கொலை, கொள்ளைச்சம்பவங்களில் 16 சம்பவங்களுடன் இவர்களுக்கு சம்பந்தமுண்டென்றும், சிலசம்பவங்களுக்கு நேரடியாக தொடர்பு இருந்ததென்றும் சிலவற்றுக்கு இவர்களின் கண்காணிப்பு இருந்ததாகவும், வேறு சில சம்பவங்கள் நடந்தது பற்றி இவர்களுக்கு தெரியுமென்றும் புலன்விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## பொலிஸாருக்கு மேலும் புதிய தகவல்கள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி கொள்ளைகள் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரான வல்வெட்டித்துறையை சேர்ந்த 'குட்டிமணி யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி 10ம் வார்ட்டில் பலத்த பாதுகாப்புடன் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் நீண்டநேரமாக விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்ட 3 சந்தேகநபர்களும் நேற்று முழுவதும் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சந்தேகநபர் 'குட்டிமணிக்கு' பொலிஸ், கடற்படை, இராணுவத்தினரால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நேற்று நண்பகல் 12மணிக்கு ஆஸ்பத்திரிக்கு வந்த பார்வையாளர்கள் வழக்கமான பாதையால் செல்ல அனுமதிக்கப்படவில்லை. வாசல் பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டுவேறு வழியால் அனுப்பப்பட்டனர். பிரசவ வாட்டிற்கு செல்ல வந்தவர்களும், தடுத்து திருப்பியனுப்பப்பட்டனர். எந்தக் காரும், உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

(8-ம் பக்கம் பார்க்க)

உ
முருகா



ஓர் நற் செய்தி

வீடு கட்டுவோருக்கும்,
மரத்தொழில் செய்வோருக்கும்
தேவையான
பாலை, முதிரை, யாவறணை
ஆகிய இன குத்தி மரங்கள்

**அரசாங்க மரக்கூட்டுத்தாபன விற்பனை விலக்கு**

எம்மிடம் கையிருப்பில் உள்ளன.
விசேட அளவுகளைக் கொண்ட குத்திமரங்கள் கையிருப்பில் தற்சமயம் இல்லாவிடில் அவைகள் தருவித்துத் தரப்படும்.
தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு

கிழமை நாட்களில் காலை 8-00 மணி முதல்
மாலை 5-00 மணி வரையும்
சனிக்கிழமைகளில் காலை 8-00 மணி முதல்
பகல் 1-00 மணி வரையும்
நேரில் வந்து தேவையான மரங்களைப் பெற்றுச்செல்லலாம்.

முகவர்,
அரச மரக் கூட்டுத்தாபன நிலையம்
பலாலி றேட், கோண்டாவில்.
சி. சரவணபவன்,
இல. 1, செட்டித்தெரு, யாழ்ப்பாணம்.
ரெலிபோன்: 7615

**பிறந்ததின விழா**
நடராஜா ஜெகதீஸ்வரி



முதலாவது
பிறந்ததினத்தைக்
கொண்டாடும்
ஜெகதீஸ்வரியை
அம்மா, அப்பா, மாமா, மாமி, அம்மம்மா, அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன்
வாழ்த்துகின்றனர்

ஐயனார்கோவிலடி,
உடையார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(8810)

உ
சிவமயம்
அன்பு ஆதரவாளப் பெருமக்கள் அனைவருக்கும்
★ துர்மதி வருடப் புத்தாண்டு ★
**நல் வாழ்த்துக்கள்**
உரித்தாகட்டும்!
★ அழகான ★ துரிதமான ★ சிக்கனமான
அச்சுவேலைகளுக்கு
★ **பாலா அச்சகம்–காரைநகர்** ★

முக்கிய குறிப்பு: எமது அச்சகத்திற்கு வேறு கிளைகளோ, அலுவலக் காரியாலயமோ நாட்டின் எப்பகுதியிலும் கிடையாது என்பதை ஆதரவாளர்கள் அனைவருக்கும் இத்தால் தெரிவிக்கின்றோம்.

சபா. பாலகிருஷ்ணன் (உரிமையாளர்)
வித்துவான் மு சபாரத்தினம்
(சைவமணி, சித்தாந்தச் செம்மல்)
போன்: காரைநகர் 24
(8798)

# வரிவிளம்பரம்


## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கும் அண்மையிலும், நல்ல கிணற்றுடனும் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சிவகுமார் 539, A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 8804

மல்லாகம் சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் கே. கே. எஸ் றோட்டில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: வி. ரங்கநாதன், கிராமசபை கந்தோர், மல்லாகம். 8796

சொந்தப் பாவிப்பிலுள்ள சவலட் வைக்கிங் மொடல் லொறி விற்பனைக்குண்டு. யூரோன் எலக்றிக்கல், 141 டொக்லிவீதி, யாழ்ப்பாணம். 8797

## WANTED

Engineering Apprentice Qualification G. C. E. (O/L, with Credit pass in Science Subjects Closing date: 15-4-81 Apply with Testimonials, Haran Engineering Works 61 Temple Road, Jaffna 8799

## பதவி வெற்றிடம்
### கிராமசபை, அச்சுவேலி

இக்கிராமசபையின் கீழுள்ள நூலகத்தில் 'நூலகபரிசாரகர்' (Library Attendant) பதவிக்கான விண்ணப்பங்கள் அச்சுவேலிக் கிராமசபை எல்லைக்குள் வதியும் விண்ணப்பதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 21-4-81 வரை ஏற்றுக்கொள்ளப்படும். மாதிரி விண்ணப்பத்தை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பார்த்துத் தயாரித்துக் கொள்ளலாம். ஏனைய விபரங்களையும் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

சி. தங்கராசா,
நிர்வாக உத்தியோகத்தர்,
கிராமசபை,
அச்சுவேலி.

கிராமசபை அலுவலகம்,
அச்சுவேலி,
2-4-81 8800


## பத்து

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தந்தையையிழந்தது ஒரு புறம், தாய் அடைந்துவரும் ஆறுதல் பெருங்கவலை மறுபுறம் இவைப்பொறுக்காத பீலிக்ஸ் மனவிரக்தியில் பைத்தியகாரனின் நிலையில் காலத்தைக் கடத்தலானார்

எனினும் மனதிற்கு ஆறுதலும் அமைதியும், ஏற்படவில்லை. மன அமைதியைத் தேடி 1922 ஆம் ஆண்டில் கால் நடையாகவே உலகப்பயணத்தைமேற்கொண்டார்.

1932ஆம் ஆண்டு ஸ்கொத்லாந்தை வந்தடைந்தார் பீலிக்ஸ்

கையில் ஒரு சதமும் இன்றி உலகப்பயணத்தைமேற்கொண்ட இவர், படஅஞ்சல் அட்டை விற்றே பயணத்தை மேற்கொண்டுவந்தார்.

அவரது பத்து ஆண்டுப்பயணத்தின்போது பத்துலட்சம் படபோஸ்காட் விற்றசாக்கணக்கிட்டிருந்தனர். 1933ஆம் ஆண்டு தன் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டார்.

— வி. கே. நவசோதி.

## நெல்லியடி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போதாது என்று நாய்களும் மாடுகளும் இக் குளத்தில் நீராடுகின்றன. நீராட்டப்படுகின்றன. இப் பிராணிகளின் நீராடல் பொதுமக்களின் பொது சுகாதாரத்தைபாதிக்கும் என்பது யாவரும் அறிந்ததே

யாழ் குடாநாட்டிலே நீருக்குப் பெருந்தட்டுப்பாடு காணப்படும் பகுதிகளில் கரவெட்டி முதன்மையானது இந்த நிலையில் மக்கள் நீருக்காகத் தவஞ் செய்யும் போது நாய்களும் மாடுகளும் நீராடுவதனை எந்த வொரு நல்லுள்ளம் படைத்தவனும் விரும்பமாட்டான். ஆனால் அக்குளக் குளத்தில் இது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

நீரினை அசுத்தப் படுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் மூலம் பட்டினசபை தமது கடமையைச் செய்யலாம். பிராணிகளை நீராட்டுவோரை சமூக நல விரோதிகளாகக் கருதி, இவ் விடயத்தில் பட்டினசபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதில் காலதாமதமின்றி நடவடிக்கை எடுப்பார்களா?

ஏ. சுப்பையா
கிழவிதோட்டம்
கரவெட்டி.


யாழ் மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் நடத்தும்

### தமிழ்த்தூது தவத்திரு தனிநாயக அடிகளார் நினைவு விழாக் கட்டுரைப் போட்டி

காலம்: 30-05-1981 சனிக்கிழமை காலை 10 மணி

| பிரிவுகள் | கட்டுரைத் தலைப்புகள் |
|---|---|
| 1) 4, 5ஆம் வகுப்புகள் | - தனிநாயக அடிகளாரின் வாழ்க்கை |
| 2) 6, 7, 8ஆம் வகுப்புகள் | - தனிநாயக அடிகளாரின் கல்வித்தொண்டுகள் |
| (3) 9 10 ஆம் வகுப்புகள் | - தனிநாயக அடிகளாரின் தமிழ்த்தொண்டுகள் |
| (4) 11, 12ஆம் வகுப்புகள் | - உலகத் தமிழ் ஆராய்ச்சியின் தந்தை |

நேரம்: எல்லாப் பிரிவுகளுக்கும் ஒரு மணித்தியாலயம்

கிளைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள்; 20-05-1981

கிளைகள் தாய்ச் சங்கத்திற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள்: 25-05-1981

மேலதிக விபரங்களுக்குக் கிளைச் செயலாளர்களுடன் அல்லது பொதுச்செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

எமது சங்கம் 20-06-81 இல் நடத்தும் அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் 24-06-81 புதன்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியிடப்படும்.

சி. வின்சென்ற்,
பொதுச்செயலாளர்,

"றெஜீனு வாசா",
பெரிய தோட்டம்,
கரவெட்டி. 3805


## கோப்பாய்த் தொகுதி

# மாதிரிக்கிராம இடமாற்றம்;
## அறவழிப் போராட்ட குழு எதிர்ப்பு
### மாவட்ட அமைச்சருக்குத் தந்தி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்த் தொகுதியில் அமைக்கப்படவிருக்கும் மாதிரி கிராமம் உரும்பிராயில்தான் அமைக்கப்படவேண்டும். இதுவே காலஞ்சென்ற கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கதிரவேலுப்பிள்ளையின் விருப்பமாகவுமிருந்தது.

இவ்வாறு வலியுறுத்தி அறவழி போராட்டக் குழு மாவட்ட அமைச்சருக்கு தந்தி ஒன்றை அனுப்பியுள்ளது.

திரு. கதிரவேலுப்பிள்ளை விரும்பிய இடத்தை மாற்றி வேறு இடத்தில் மாதிரிக் கிராமத்தை மாற்றுவது அவருக்கு ஏற்படுத்தும் களங்கமாகும் என்றும் அறவழிப் போராட்டக் குழு தெரிவித்துள்ளது.

கோப்பாய்த் தொகுதியில் வயாவிளானிலேயே மாதிரிக் கிராமம் அமைக்கப்படவிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்ததையடுத்து அறவழிப் போராட்டக் குழு இத் தந்தியை மாவட்ட அமைச்சருக்கு அனுப்பியுள்ளது.

உரும்பிராயில் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் சிறுபான்மை மக்கள் வதியும் பகுதியில் இம்மாதிரிக் கிராமம் அமையவேண்டுமென்று திரு. கதிரவேலுப்பிள்ளை விரும்பியதாகவும் இது குறித்து பிரதம மந்திரிக்கும் அவர் கடிதம் எழுதியிருந்ததாகவும் தெரிகின்றது

ஆனால் வயாவிளானில் மாதிரிக் கிராமத்தை அமைக்க இப்பொழுது காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதாகவும் பூர்வாங்க ஏற்பாடுகள் முடிந்துவிட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

கோப்பாய்த் தொகுதியில் உரும்பிராயைத் தவிர்த்து வேறு இடத்தில் மாதிரிக் கிராமம் அமைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தும்படி அறவழிப் போராட்டக் குழு யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனையும் தந்தி மூலம் கேட்டுள்ளது.

## பிரதேச அபிவிருத்தி அமைச்சு நடத்தும்
### நாடக - இலக்கியப் போட்டிகளில் சிறந்த பரிசுகள்

(கொழும்பு)

பிரதேச அபிவிருத்தி இந்து சமயவிவகாரங்கள் அமைச்சு நடத்தவிருக்கும் நாடகப் போட்டிகளில் வெற்றிபெறுகிறவர்களுக்கும், வெற்றி பெறும் நாடகங்களுக்கும் சிறந்த பரிசுகளை வழங்க அமைச்சு முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

சிறந்த நாடகப் பிரதிக்கு 1000 ரூபாயும் சிறந்த நடிகருக்கு 1000 ரூபாயும் வழங்கப்படவிருப்பதாகத் தெரிகின்றது சிறந்த நெறியாளர்களுக்கும் பரிசு வழங்கப்படும்.

தேசிய இளைஞர் சேவை மன்றமும் இளைஞர்களுக்கிடையில் நாடகப் போட்டிகளையும் இலக்கியப் போட்டிகளையும் நடத்தவிருக்கின்றது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சு நடத்தும் நாடகப் போட்டிக்கான பிரவேசப் பத்திரங்களைத் தாக்கல்செய்யும் திகதி அடுத்த மாதம் 15-ம் திகதியுடன் முடிவடையும் என்று தெரிகின்றது இதுபற்றிய விபரம் ஒன்றை அமைச்சு விரைவில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும். இலக்கியப் பிரிவிலும் நாவல்துறையிலும் முதல்பரிசாக 1500 ரூபாவும், இரண்டாம் பரிசாக 1000 ரூபாவும், மூன்றும் பரிசாக 750 ரூபாவும் வழங்கப்படவிருக்கின்றன.

சிறுகதைப் பிரிவில் முதல் பரிசு 500 ரூபாவும், 2-ம் பரிசு 200 ரூபாவும், மூன்றும் பரிசு 100ரூபாவும் வழங்கப்படவிருக்கின்றது.

கவிதைத்துறையில் முதல் பரிசாக 250 ரூபாவும், 2ம் பரிசாக 150 ரூபாவும், 3ம் பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். குழந்தைகளுக்கான கவிதைகளுக்கும் பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன.



தவக்கால நற்சிந்தனை

## சிலுவையை உற்று நோக்கு

இஸ்ரேயேல் மக்கள் மோயீசனுக்கு எதிராக முறுமுறுத்தனர். நாங்கள் மடிந்து சாவதற்காகவோ எங்களை எகிப்திலிருந்து இங்கு அழைத்துவந்தீர் என்று முறையிட்டனர். அப்பொழுது இறைவன் கோபத்தினால் தீ நாகங்களை அனுப்பி அவர்களைக் கடிக்கச் செய்தார். தண்டனைக்கு அஞ்சி மக்கள்மனந்திரும்பினர். அப்பொழுது இறைவனின் கட்டளைப்படி ஒரு கம்பத்தில் வெண்கலப் பாம்பைக் கட்டித் தூக்கினர். கடியுண்டோர் அதைப்பார்த்து பிழைத்தனர்.

அவ்வாறே இன்று பாவிகளும் சிலுவையில் உயர்த்தப்பட்ட யேசுவைப் பார்க்கட்டும் பார்த்து மனம்கசிந்துருகி கண்ணீர்வடிக்கட்டும். பாவத்தால் காயமுற்றோர் குணமடைவர். அனைவருக்கும் மீட்பு உயர்த்தப்பட்ட சிலுவையில் உள்ளது.

வாழ்வில் சுவை விளைவிக்க வல்லனே, வாழ்வை வீணாக்கித் திரிபவனே, கல்வாரிக்குன்றில் உயர்ந்துநிற்கும் சிலுவையைப் பார்! நோக்கு அச்சிலுவையை!! தொங்கும் புனித உருவைப் பார்!!! அர்த்தம் தாய்மையின், தியாகத்தின் சின்னமாய் விளங்கும் சிலுவையைப் பார்.

— பஸ்ரியன்

## யாழ்ப்பாணம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்தி வைப்பதோடல்லாமல் "துர்க்காதேவி" யைப் பற்றி தொடர்ந்து சிலநாட்கள் சங்கீத உபந்நியாசம் செய்ய சுவாமிகள் இணங்கி இருக்கின்றார்.

சுவாமிகளின் ஆன்மீகக் கருத்துக்கள் தனிப்பட் மனிதனுக்கும், சமூகங்களுக்கும் புதிய ஆற்றலை அளித்து பக்களை அறத்துறையில் நிற்கும் வண்ணம் உறுதிபயக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். இவருடைய ஞானஉரைகள் ஆற்றல் குன்றியவர்களுக்குத் தளராத நம்பிக்கை ஒளி உடைந்த உள்ளங்களுக்கு ஒரு பெரும் சக்திக்களஞ்.

## "மக்கள் குறைகளைக்கேட்பதே கிராமயாத்திரையின் நோக்கம்
### வவனியாவில் பண்டிதர் விளக்கம்

(வவனியா)

"பொத்துவில் தொகுதியில் நிராதவாக இருக்கும் எமது மக்களை நேரில் சென்று சந்தித்தோம் அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தோம். எமது விடுதலை இயக்கத்தின் பெயரால் தெரிவுசெய்யப்பட்ட கனகரத்தினம் கட்சி மாறினார். மக்கள் அவரை நம்பி இருந்தார்கள். நாங்கள் அவர்களிடம் சென்றபோது அடிக்கடி எம்மை அத்தொகுதிக்கு வர வேண்டும் என்று கேட்டார்கள் இதேபோல எல்லாத் தொகுதிகளுக்கும் சென்று எமது மக்களைப் பார்க்கவேண்டும். குறைகளைக் கேட்டறிய வேண்டும் எனத்தீர்மானித்தோம் அதன் விளைவே கிராம யாத்திரை"

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ இரத்தினம் தெரிவித்தார். வவனியா யூ.சி மண்டபத்தில் திரு. ஐ கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் உரையாற்றினார். அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இந்த அரசாங்கம் ஒரு பாடசாலைக்கு 3 ஆசிரியர்கள் வீதம் 7000 சிங்கள ஆசிரியர்களை நியமிக்கது அதே 2000 தமிழ் ஆசிரியர்களை ஒரு பாடசாலைக்கு ½ வீதம் மட்டுமே நியமித்து 4சிங்களபாடசாலைகளுக்கு 12 சிங்கள ஆசிரியர்கள் 4 தமிழ் பாடசாலைகளுக்கு 3 தமிழ் ஆசிரியர்கள் இதனை எதிர்த்து எமக்குரிய உரிமையை நாம் பெறுவதற்காகப் போராடுகிறோம். 30

(5ம் பக்கம் பார்க்க)

## மழை வேண்டி மசூதிகளில் தொழுகை

(மன்னார்)

சமீபோது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியைப் போக்கி மழை பெய்யும் பொருட்டு மன்னார் மாவட்டத்திலுள்ள மசூதிகளில்விசேஷ தொழுகையும் பிரார்த்தனையும் இடம் பெற்றன.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜும்மாவுக்குப் பின் விசேஷ தொழுகையும் பிரார்த்தனையும் இடம்பெற்றன.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் வேண்டுகோளுக்கிணங்க இவ் விசேஷ தொழுகையும் பிரார்த்தனையும் இடம்பெற்றன. (அ)

## வருடாந்த உற்சவம்

(மாதகல்)

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி இம்மாதம் 16ம் திகதி வியாழக்கிழமை முடிவடைகின்றது. இம் மகோற்சவத்தையொட்டி சிறப்புச் சொற்பொழிவுகள் நாள்தோறும் நடைபெறுகின்றன.

மகோற்சவத்தையிட்டு மாதகல் இந்துசமய அபிவிருத்திச்சங்கம் மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டியொன்றை நடாத்தி வருகின்றது. (இ. ஈ)

# உலகயுத்தம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது

## பாரதப் பிரதமர் எச்சரிக்கை

(புதுடில்லி)

உலக யுத்தம் ஒன்று ஏற்படக்கூடிய அபாயம் தோன்றியிருப்பதாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

காஷ்மீர் மாநிலத்தில் காங்கிரஸ் ஐ உறுப்பினர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் திருமதி காந்தி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

உலக யுத்தம் ஒன்று ஆரம்பமாகும் அபாய அறிகுறிகள் தோன்றத் தொடங்கியுள்ளன. எந்தக் காரணம் குறித்தும் இந்தியா இதனை ஆரம்பிக்க மாட்டாது என்று குறிப்பிட்ட திருமதி காந்தி இந்திய மக்களை எச்சரிக்கையோடு இருக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

இந்தியா வலிமையுடன் இருக்கின்றது. அதற்காக அது மந்தமாக இருந்துவிட முடியாது என்று திருமதி காந்தி கூறினார்.

தியாகோ கார்ஷியாவில் ராணுவத் தளம் பலப்படுத்தப் படுவதையும், இந்து சமுத்திரப் பிராந்தியம் அமைதிப் பகுதியாக இருக்கவேண்டும் என்ற அணிசேரா நாடுகளின் கோரிக்கையையும் இந்திரா குறிப்பிட்டார்.

வளரும் நாடுகளுக்கு அமெரிக்கா நவீன போர் ஆயுதங்கள் வழங்குவதையும் திருமதி காந்தி கண்டித்தார். பாகிஸ்தானுக்கு முன்பு வழங்கப்பட்ட ஆயுதங்கள் யாவும் இந்தியாவுக்கு எதிராகவே பாவிக்கப் பட்டுள்ளன என்பதை அந்நாடு கவனிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



# "தேர்தலில்மக்கள்விரும்பிய கட்சிக்கே வாக்களிக்கலாம்"

## ஜனநாயகம் பற்றி அமைச்சர் விளக்கம்

(மட்டக்களப்பு)

அரசியல் என்பது வெறும் காடைத்தனத்துடன் பின்பற்றக்கூடிய கொள்கையல்ல. நிதானத்துடன் பின்பற்ற வேண்டியதொன்று நம் மக்கள் தங்கள் அரசியல் உரிமையை பயன்படுத்த அளிக்கப்படுகின்ற சந்தர்ப்பம்தான் தேர்தல் ஆகும். தேர்தலில் மக்கள் விரும்பிய கட்சிக்கு வாக்களிக்கலாம் அதுதான் ஜனநாயகமாகும் இதனை எவரும் தடை செய்ய முடியாது.

இவ்வாறு மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை தனது தொகுதியிலுள்ள ஆரையம்பதி கிராமசபையின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கிராமசபை விசேட ஆணையாளர் திரு. சாம்பசிவஐயர் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்:-

இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தார்மீக அரசாங்கமாகும். இந்த அரசாங்கத்தின் காலத்தில இந்நாட்டு மக்கள் சுத்தமான ஜனநாயகக் காற்றை சுவாசிக்கின்றார்கள். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மூடிவைக்கப்பட்ட ஜனநாயகம் என்ற பேழை இன்றைய அரசாங்கத்தால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாங்கம் இனமத பாகுபாடின்றி மக்கள் சேவையை திறம்படச் செய்து வருகின்றது. கடந்த அரசின் காலத்தில் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தமிழரின் உரிமைகள் பறிக்கப் பட்டது. அதனை எதிர்த்து தந்தை செல்வநாயகம் தனது காங்கேசன்துறைத் தொகுதி இடைத் தேர்தலுக்கு தயாரானார்; ஆனால் ஜனநாயக மரபுப் படி ஒருமாத காலத்திற்குள் நடாத்தப்பட வேண்டிய இடைத் தேர்தல் சுமார் இரண்டு வருடகாலம் தாமதிக்கப்பட்டது

1970 - 1975 வரை ஆட்சி செய்ய மக்கள் அங்கீகாரம் பெற்ற இவர்கள் ஜனநாயகத் திற்கு முரணாக 1977 வரை நீடித்தனர். இதனை எதிர்த்து இன்றைய ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா தான் பதவி வகித்த கொழும்பு (மேற்கு) பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு மறுதேர்தலுக்கு நின்றார்.


மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் உண்டு. தேர்தல் வரும் போது அவர்கள் விரும்பிய கட்சிக்கும் கொள்கைக்கும் வாக்களிக்கலாம். ஆனால் அரசியலில் காடைத்தனம் புரிபவர்கள் மக்களால் விரட்டப்படுவார்கள் என்றார்.

மட்டக்களப்பு இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் பரீட் மீராலெப்பை பேசுகையில்:-


நான் 1956-ம் ஆண்டு பாடசாலை மாணவனாக இருந்த காலத்தை இவ்வைபவத்தின் போது நினைத்துப் பார்க்கின்றேன். ஒருநாள் நானும் ஏனைய சிலரும் எமது பள்ளி வாசலில் மதியம் தொழுகை முடித்துவிட்டு வாசலில் நிற்கும்போது அண்ணன் இராசதுரையும், அவரது தொண்டர்களும் எல்லைச் சூழ்ந்து கொண்டனர். அண்ணன் ஓர் கதிரைமேல் நின்று பிரசாரம் செய்தார். மட்டக்களப்பு வாழ் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையுடன் பிரிந்துவிடாமல் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல் வாழவேண்டுமென்ற அவரின் அன்றைய பேச்சில் நான் கவரப்பட்டேன் அண்ணனுடன் நின்று பாராளுமன்ற உறுப்பினராக சேவை செய்வேன் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

1956 முதல் தமிழ் மொழிக்காக உழைத்த அவர் இன்று எமது அரசாங்கத்தில் சேர்ந்து தமிழ் மொழி அமுலாக்கத்திற்கு பொறுப்பான அமைச்சராக உள்ளது மிகவும் மகிழ்ச்சிக்குரியது என்றார்.

மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு இரா. தியாகலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. அந்தோனிமுத்து உட்பட பலர் உரையாற்றினர்.


வண்ணக்கோலமும் எண்ணற்ற பாவனையும் தருவது டைரப் பெயின்ற்.




கலன்ற் இண்டஸ்ட்ரியல் பெயின்ற்ஸ் லிமிட்டெட்
60, பார்க் வீதி, கொழும்பு-2. தொலைபேசி: 36608.

பெயின்ற்களுடன் பகட்டுடன் மிளிர்வது


## 16-ம் திகதி முதல்

# கப்பல்மூலம் தலைமன்னார் ஊடாக சரக்கு இறக்குமதி

(மன்னார்)

தலைமன்னார் - ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இம்மாதம் 16ம்திகதி முதல்இலங்கைக்குச் சரக்குகளை இறக்குமதி செய்யும் சேவைகள் ஆரம்பமாகும். இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. (அ)

# சிறிமா மன்னார் வருகிறார்

(மன்னார்)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும், முன்னாள் அத்தனகலைத் தொகுதி எம். பியுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இம்மாதம் மன்னாருக்கு விஜயம்செய்யவுள்ளார்.

இவரை வரவேற்க மன்னார் மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகள் ஏற்பாடுகளை செய்துவருகின்றன. (அ)

# "சமய மன்றங்கள் சிறுவர்கள் மீது கவனஞ்செலுத்த வேண்டும்"

(புலோலி)

"எதிர்காலச் சந்ததியினரான இன்றைய இளம்பிள்ளைகளை உலகம் போற்றும் பண்புள்ளவர்களாக உருவாவதற்குச் சமய போதனைகள் மிக முக்கியம். இதனைக் கருத்தில் கொண்டு சமயமன்றங்கள் சிறப்பாகச் செயற்படவேண்டும்".

இவ்வாறு ஆத்தியடி சைவ மன்றத்தின் 70வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசிய இளைப்பாறிய ஆசிரியர் திரு. கே. கிருஷ்ணசிங்கம் சொன்னார். இளைப்பாறிய அதிபர் திரு. த இராமநாத பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது திரு. கிருஷ்ணசிங்கம் தொடர்ந்து பேசுகை கூறியதாவது;

"பள்ளிப்படிப்பும் அரசியல் ஈடுபாடும் எமது இளஞ்சந்ததியினரை உலகுக்குகந்த நற்பிரஜைகளாக உருவாக்கமாட்டாது. சமயபோதனைகளே அவர்கள் மத்தியில் ஒழுக்கத்தையும் பக்தியையும் ஏற்படுத்தி உலகுக்குகந்த நற்பிரஜைகளாக உருவாக்குகின்றது.

"சிறுவர்களுக்கு சிறுவயதிலிருந்தே சமய போதனைகளைச் சிறப்பாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவேண்டும். சமயமும் கோவில்களும் மக்கள் மத்தியிலிருந்து பஞ்சமாபாதகங்களை ஒழித்து மக்கள் இறையருளைப்பெற்று பேரின்பப் பெருவாழ்வை அடையும் வழியையே எமக்கு காட்டுகின்றன" என்றார். (அ)

# பொற்கொல்லர் கோரிக்கை

(மன்னார்)

பொற்கொல்லர்களுக்குப் போதிய தங்கம் வழங்கப்படாததால் பல பொற்கொல்லர்கள் வேலையில்லாது திண்டாடுகிறார்கள்

இதனால் போதியளவு தங்கத்தை பொற்கொல்லர்களுக்கு வழங்குமாறு மன்னார் பகுதி பொற்கொல்லர்கள் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# மருந்துஇல்லாத முதலுதவிப் பெட்டிகள்

(மன்னார்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலை பஸ் வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள முதலுதவிப் பெட்டிகளில் முதலுதவிக்கான மருந்து வகைகள் இல்லை.

இப்பெட்டிகள் யாவும் வெறுமையாகவே இருக்கின்றன. (அ)

# திடீர் இடமாற்றம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் சப் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு. சில்வா யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு சிலமாதங்களின் முன்பே இடமாற்றம்பெற்று வந்த இவர் தற்போது திடீர் இடமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளார்.

அண்மையில் துப்புத்துலக்கப்பட்ட அச்சுவேலி நகைக் கொள்ளை தொடர்பான விசாரணைகளில் இவரே தீவிரமாக ஈடுபட்டு கொள்ளையை துப்புத்துலக்கியதும் குறிப்பிடத்தக்கது.

## தென்புலோலி

# உபயகதிர்காமம் திருப்பணி ஆரம்பம்

(புலோலி)

இலங்கையின் இரண்டாவது கதிர்காமம் எனப்படும் சரித்திரப் பிரசித்திபெற்ற தென்புலோலியூர் உபயகதிர்காம ஆலய திருப்பணி வேலைகள் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அடுத்தமாத இறுதியில் இவ்வாலய மகாகும்பாபிஷேகம் நடைபெறுமென ஆலய புனருத்தாரண சபைப் பொருளாளர் திரு ஆ. மயில்வாகனம் தெரிவித்தார்.

உலகில் வேறு ஆலயங்களில் அமைந்திராத முறையில் மூலலிங்கம் சக்கரயந்திர வடிவுடன் அமைந்துள்ளதென்பதும் தென்னிந்தியாவில் வசித்த பக்தியுள்ள பெண் ஒருத்தி கண்ட கனவில் குறிப்பிட்டபடி வட இலங்கையில்கண்டு இந்த ஆலயம் அமைக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார் காலரா முகாம்கள் மூடப்படும்

(மன்னார்)

மன்னார்ம வட்டத்தில் நிறுவப்பட்டுள்ள 5காலரா நோய் தடுப்புமுகாம்களும் விரைவில் அகற்றப்படவுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் காலரா நோய் வேகமாகப்பரவியதைபடுத்து அடம்பன், வேப்பங்குளம், பரப்புக்கடந்தான், பள்ளமடு, காத்தான்குளம் ஆகிய இடங்களில் இத்தடுப்பு முகாம்கள் நிறுவப்பட்டன. (அ)

# அமைச்சர் திறந்து வைத்தார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவது புடவைக்கைத்தொழில் சேவை நிலையமொன்றை ஆரையம்பதி செல்வா நகரில் மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை திறந்து வைத்தார்

இவ்வைபவத்தில் மட்டக்களப்பு இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப்.பரீட் மீராலெப்பை கலந்து கொண்டார்.

**மணிவாக்கு**

மனிதன் தன்னை முற்றிலும் அறிந்து கொள்ளுதற்குத் தனது மூலத்தையே அறிந்தாக வேண்டும்.

—அருள்விருந்து

# நமது நோக்கு

## தெம்பூட்டுந் தகவல்

எமது புலோலி நிருபர் கொடுத்துதவிய செய்தியை எங்கள் நேற்றைய பத்திரிகையில் படித்தவர்கள் பலர், வடபகுதி கொள்ளை கொலைச் சம்பவங்களுக்கு முடிவு கிட்டுகின்றதென நம்புகிருர்கள். நேற்று எங்களுடன் நேரிலும் தொலைபேசியிலும் பலர் தொடர்பு கொண்ட அனுபவம் இதற்குச்சான்ருகும். சுபட ரீதியில் இச்செய்திகளை நாம் ஆராய்ந்து அபிப்பிராயம் கூற முற்படுவதில்லையென்பது வாசகர் அறிந்த விடயம்.

இப்பகுதியில் வாழுகின்ற அமைதியும் கட்டுப்பாடும் விரும்பும் சாதாரண மக்கள் போல் நாமும் அவற்றையே நாடுகின்றேம்.

பொலிசாரினல் ஏழு ஆண்டுகளுக்கு மேலாகத் தேடப்பட்டு வந்தவர்களெனக் கூறப்பட்ட மூவர் நேற்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகச் செய்தி. இது உண்மையானல் இங்கு ஏழு வருடங்கள் வரை நிலவும் அமைதியின்மை தீர வழி பிறக்கலாமென நாம் நம்ப ஆசைப்படுகின்றேம்.

வடபகுதி மக்கள் பாரம்பரியம் பேணும் தன்மையினர் இலகாலம் இங்கு நிலவி வரும் பீதி நிலை இவர்கள் வாழ்க்கை முறைக்கு முரண்பாடானது. தென்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்தை ஒரு பயங்கரவாதப் பிரதேசமாகக் கருதி வருகிருர்களென்ற பேச்சு பரவலாகின்றது. இதற்கு மேலான தப்பெண்ணம் வேறெது?

அரசியல் ரீதியிலும் நியாயமற்ற முறையில் சந்தேகங்கள் எழுந்ததற்கு இச்சம்பவங்கள் முதற்காரணமாகலாம்; அத்துடன் வடபகுதி அரசியலில் பகைமை கொண்டவர்கள் இதனைச்சாட்டி இப்பகுதி மக்களை வீழுந்தபாட்டுக்கு குறி சுட்டுவந்தது இன்றைய அரசியலின் வங்குரோட்டு நிலைமையைக்குறிக்கின்றது.

அது எவ்வாருயினும் இந்தக் கொடிய நிகழ்ச்சிகளை, கொள்ளைக் கும்பலைக் கண்டுபிடிப்பதில் இப்பகுதி மக்கள் என்றும் தயாராகவிருக்கின்றனர். அடுத்தடுத்து நிகழ்ந்த பயங்கரவாதக் கொள்ளைகள் பொலிசாருக்கும் ஒரு சவால் என்றும் நாம் எழுதியிருந்தோம்.

இச்சவாலை ஏற்று வெற்றி நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் பொலிசார், இராணுவத்தினருடைய முயற்சிகள் பயனளிக்கவேண்டும்; அதேசமயம் இவ்வித தீவிர வேட்டையில் பொதுமக்கள் எவ்வித இன்னல்களுக்கும் உட்படாமல் பாதுகாக்கப்படவேண்டுமெனவும் மீண்டும் வற்புறுத்துகிறேம்.

## பாராளுமன்ற எலியோட்டம்

பல்கலைக்கழக அனுமதியில் எலியோட்டம் பலியானது இன்று பாராளுமன்ற எலியோட்டம் இப்பகுதி மக்களைப் பீத்துப் பிடித்தவர் போலாக்கிவிடுகின்றது.

அரசியலே எதற்கும் அரிய மருந்தென்று நம்பும் மக்கள், அரசியல் வாதிகளே தலைவரென்றும், பாராளுமன்றம் புகுந்தவரே மக்கள் தலைவரென்றும் நூற்றுக்கு நூறு நம்பி வாழும் நிலை உச்ச வரம்பு அடைந்திருக்கிறது.

அரசியல், தொழில், குடும்பம் என்பவற்றில் நிலவும் ஆட்சிமுறை பெரும்பாலும் ஆணைக்குக் கீழ்ப்படிவதால் நடைபெறவேண்டி இருக்கிறது.

"காரணம் கேட்காதே சொன்னபடி செய்", என்னும் கட்டளை குழந்தைகளிடத்தும் படைவீரர்களிடத்தும் இடுவது பொருத்தமெனலாம். ஆனல் பொது மக்கள் இந்தக் கட்டளையை ஏற்பதினல் பொதுநல விவகாரங்களுக்குத் தேவைப்படும் பொதுஜன அபிப்பிராயம் கால் கொள்வதில்லை.

தலைவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் விரும்புவதுபோல் பெரும்பாலான மக்கள் சிந்திப்பது தொல்லை என்று கருதுகிருர்கள். அந்தப் பொறுப்பை கட்சித் தலைவர்களிடம் ஒப்புவித்துவிட்டு, ஆராய்ச்சியால் வருங் கவலையற்று அமைதியாக வாழ்கின்றனர்.

பாராளுமன்ற இடைத்தேர்தல் இல்லாத இன்றைய ஆட்சிமுறையில் கட்சித் தலைவர்கள் ஒரு புதிய எம். பி. யை நியமிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

கோப்பாய்த் தொகுதி இதற்கு உதாரணம். எம். பி.யாக வந்தாலே மக்கள் தலைவருகலாமென்ற பித்து நிலையில் எலி ஓட்டம் இடம் பெறுவது நூதனமல்ல

காலஞ்சென்ற கோப்பாய் எம். பி. இக்கருத்துக்கு மாறுபட்டவர்; தமது சிந்தனைத் திறமையால் மக்களுக்குச் சேவை புரிந்தவர் என்றே இன்று மதிக்கப்படுகின்றுர்; தக்க ஒருவரை எவ்வித தீவிரமுமின்றி அத்தொகுதிக்கு நியமிப்பதில் ஆரவாரம் எதுவுமிருக்க வேண்டியதில்லை.

மக்களுக்குச் சேவை செய்ய விரும்புபவர் பாராளுமன்றத்திற்கு வெளியில் பணிபுரிய பல துறைகள் காத்திருக்கின்றன. ஜனநாயக ஆட்சி முறை வலுப்பெற்றிருக்கும் நாடுகளில் இத்தகைய அறிஞர்கள் பொதுநல வாழ்வின் விடிவெள்ளிகளாகத் திகழ்கின்றனர்.

### 'சட்டமும் ஒழுங்கும்'

(புலோலி)

இயற்கைவள அபிவிருத்தி இயக்கம், யாழ் இலங்கை விஞ்ஞான அறிவியல்பரப்புக்கனிஷ்டசங்கம், பருத்தித்துறை லயன்ஸ் கழகம், பருத்தித்துறை கல்விவட்டம், ஞானசம்பந்தர் கலைமன்றம் ஆகியனஇணைந்து ஒழுங்குசெய்த "சட்டமும் ஒழுங்கும்" என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு இம்மாதம் 11ம் திகதி புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை நீதவான் திரு. செ. எல். மகேசன் இக்கருத்தரங்கிலேகருத்துரைவழங்கவுள்ளார். (அ)

# யாழ்ப்பாணம் வரும் ஸ்ரீஹரிதாஸ் சுவாமிகள்

ஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமிகள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் தெற்கே ஈழத்தின் தலைநகரான கொழும்பில் ஸ்ரீஞானனந்த சேவா சமாஜம் என்னும் ஸத்ஸங்கத்தை நிறுவியது மட்டுமல்லாமல் வருடாவருடம் வருகை தந்து தானம், தபம், ஜபம் மந்திரம் போன்ற மேம்பாடுள்ள செயல்களிலெல்லாம் நமமை ஈடுபடவைத்து வேதாந்தத்திலுள்ள சாராம்சத்தை யெல்லாம் பால் போல் பிழிந்து கோவிந்தநாம சங்கீர்த்தனம், சங்கீத உபந்நியாசம் மூலம் அருளாரமுதமாகப் பொழிந்து வருவதை ஈழம்வாழ் இந்துப் பெருமக்கள் நன்கு அறிவர் உண்மையிலேயே நம் ஸத்குருநாதரின் அருளால் ஒருவேத பரம்பரையே தெற்கில் உருவாகிறதென்று சொல்ல வேண்டும் ஞானத்தவச் செல்வரான நாதரான ஸ்ரீஞானனந்தகிரி சுவாமிகளை நினைந்து சொல்லும் 'தேவா' என்ற அந்த அன்புச் சொல் யாருடைய மனதையும் கரையவைக்கும் அருட்குரலாகும். கண்ணனை நினைந்து அவர் பாடினல் போதும் பக்தர்களெல்லாம் தம்மையே மறந்து பாடுவதையும் ஆடுவதையும் நாம் பார்க்கலாம் ஆம் சுவாமி தம் ஸத் குருநாதரை வணங்கிவிட்டு உபந்நியாசம் செய்வதற்காக அமரும் போதும் உபந்நியாசம் செய்யும் போதும் அடிக்கடி தம் குரு விவேகானந்தர் ஒருகுரு க்ஷேத்திரக் கண்ணனென்ருல் சுவாமி ஹரிதாஸ்கிரியை பிருந்தாவனக் கண்ணனென்றே சொல்ல வேண்டும்.

### ஞானதீபம் ஏற்றுவோம்

இத்தகைய ஒரு மகான் இன்னும் சிலநாட்களில் நம் யாழ்ப்பாணத்திற்கு அதுவும் தெல்லிப்பழைக்கு வருகைதர இருக்கிருர் என்ருல் யாழ்ப்பாணமக்கள் செய்த முன்வினைப்பயனே. ஒருவன் தன் வாழ்நாளில் ஒரு கும்பாபிஷேகத்தைப் பார்க்க நேர்ந்தால் பல பிறவிகளுக்குச் செய்த புண்ணியம் என்று சொல்வார்கள் அப்படியிருக்க எதிர்வரும் பதினேழாம் திகதி நடக்க இருக்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை

(2-ம் பக்கம் பார்க்க)

— தேனருவி அருண்மொழி —

## மக்கள் கருத்து

### நெல்லியடிப் பட்டினசபை கவனிக்குமா?

கரவெட்டி மேற்கு, மத்தி, கிழக்கு,துன்னலை தெற்கு ஆகிய கிராமசேவை அலுவலகர்கள் பிரிவில் வசித்து வருபவர்கள் நீராடுவதற்கு அத்துளு என்னும் குளத்தை நாடிச்செல்கின்றுர்கள் சுமாரி 3000 க்கு மேற்பட்ட மக்கள் இக் குளத்தினை உபயோகிக்கின்றுர்கள் மக்கள் தொகை

(2-ம் பக்கம் பார்க்க

## அன்று நடந்தது இன்று நடப்பது

### பத்து ஆண்டுகளாக உலகப்பயணம்

அமெரிக்காவில் நியூ வுண்ட்லாந்தில் உள்ள செல ஜோன் தீவினைச்சேர்ந்தவர் பி லிக்ஸ் ஸ்ருர்லைற்.

இவரது தந்தை ஐரோப்பிய மல்யுத்தத்தில் கொல்லப்பட்டார் இதனைத்தொடர்ந்து இவரின் அன்னைக்கும் பெருங் கவலை ஏற்பட்டது.

(2ம் பக்கம் பார்க்க)


# விவசாய அபிவிருத்தி அலுவலகம்

கொன்சல்ரன்சி அன்ட் பினன்ஸ் அன்ட்
டெவலப்மென்ட் லிமிட்டெட்
மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்டுடன்

கூட்டாக இணைந்து

தமது விவசாய அபிவிருத்தி அலுவலகத்தை
17-4-81 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில்
திறந்துவைக்கின்றன.

இடம்: A. K. R. மேல்மாடிக்கட்டிடம்,
கரடிப்போக்குச் சந்தி,
கண்டி வீதி, கிளிநொச்சி.

ஆதரவாளர்களனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.
தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

செ. லோகநாதன்,
முதல்வர்,
கொன்சல்ரன்சி அன்ட் பினன்ஸ் அன்ட்
டெவலப்மென்ட் லிமிட்டெட்,
தலைவர்,
மேர்ச்சன்ட் பினன்ஸ் லிமிட்டெட்,

129, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 8183.

## சுண்டிக்குளம் கொலைவழக்கு:

# சட்டத்தரணி சுகவீனம்; விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளம் கொலை வழக்கில் 1ம் எதிரியின் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சுகயீனம் காரணமாக வராததினால் விசாரணை ஆகஸ்ட் 10-ம் தேதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம் ஜமீல் முன்னிலையில் நடைபெற்றுவந்தது.

இவ்வழக்கில் சுண்டிக்குளத்தில் 1978ம் ஆண்டு மே மாதம் 13ம் தேதி ஈ.ஏ. ஆனந்தராசா, ஆ. ஜெயரூபன் ஆகியோர், சுந்தரதேவரைக் கொலைசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்), 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம், சட்டத்தரணி செல்வி அபிமனசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். அரச தரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் ஆஜரானார். (உ)

## பார்வையாளர் அனுமதி

(திருகோணமலை)

சீனன்குடாவிலுள்ள பிறிமா மாவாலையைப் பார்வையிட விரும்பும் பாடசாலை மாணவர்கள், பார்வையாளர்கள் ஆகியோர் மாவாலையைப் பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள்.

மாவாலை முகாமையாளரிடம் விண்ணப்பித்து அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் தான் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். (அ)

## மக்கள்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு எம்முடையது. அவர்களுக்காக முழுமூச்சுடன் போராடும் ஒரே கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டுமே. நாட்டைப் பிரிக்கவேண்டும் என்று கோரி நாம் இயக்கம் நடத்துவதைப்போல, நாட்டைப் பிரிக்க கூடாதென்று கூறி சிங்கள மக்களும் இயக்கம் நடத்த முயன்றால் நிலைமை என்ன? நாம் எமது பொறுப்புகளை உணர்ந்து நிதானமாக இயக்க வேண்டியுள்ளது.

தமிழ்ஈழம் வருகின்றது. எதுவுமே இப்போது கேட்காதீர்கள் என்று நாங்கள் கூறவில்லை எமது தீவிரம் காணாது என குறைகூறும் தீவிரவாதிகளுக்கு ஒன்று சொல்ல விரும்புகின்றேன். தீவிரமாக நீங்கள் ஓடுங்கள். ஒருவர் முதலில் ஓடட்டும். ஒன்று பத்தாகட்டும். மக்கள் சரி என்றால் பத்து நூறாகி நாங்களும் உங்களின் பின்னால் ஓடி வருகிறோம்.

இலட்சியப் பாதையில் பயணம் செய்யும் எம்மிடையே ஒற்றுமை அவசியம். அதற்காக மக்களின் முழு ஆதரவும் எமக்குத் தேவைப் படுகின்றது. இந்த ஆதரவை நீங்கள் முழு மனதுடன் அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு" என்றார்.

## நல்லை ஆதீனத்தில்

# தமிழிசை விழாவும் பட்டமளிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 23வது ஆண்டுத் தமிழிசை விழாவும், இசையரசு பட்டமளிப்பு விழாவும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற போது ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசார்யஸ்வாமிகள் அருளாசி வழங்கினார்.

இசையரசுப்பட்டம் பெற்ற சங்கீத பூஷணம் திரு. எஸ். இரத்தினசபாபதிக்கு ஸ்ரீலஸ்ரீ பரமாசாரியஸ் சுவாமிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். 'இசையரசு' பட்டப் பத்திரத்தை கலாரசிமணி திரு. எஸ். செல்வநாயகம் மன்றச் சார்பில் திரு இரத்தினசபாபதிக்கு வழங்கினார். பண்ணிசைச் செல்வன் இரா. திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரி, சங்கீத வித்துவான் திரு. ஏ. திலகேஸ்வரனின் இன்னிசைக் கச்சேரி என்பனவும் இடம்பெற்றன. (ம)

## 76 லட்சம் பேர் வாக்களிப்பர்

(கொழும்பு)

ஜூன் மாதம் 4ம் திகதி நடைபெறவுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் 76 லட்சம் பேர் வாக்களிப்பர்.

24 மாவட்டங்களிலும் நடைபெறவுள்ள இவ் அபிவிருத்திச் சபைத் தேர்தலில் பயன்படுத்துவதற்கென 76 லட்சம் வாக்குச்சீட்டுக்கள் மாகாணவாரியாக உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

தொகுதி வாக்காளர் இடாப்பில் இடம் பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் இச்சீட்டு அனுப்பபபடும்.

ஒரு வாக்குச் சீட்டில் வாக்காளரின் பெயர், விலாசம், பதிவிலக்கம், வாக்களிப்பு நிலையம் ஆகியன குறிக்கப்பட்டிருக்கும். (து)

## நாவற்குளிக் களஞ்சியத்தில் பழுதானமாவும் அரிசியும்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி உணவுக்களஞ்சியத்தால் வடபகுதியிலுள்ள பல்வேறு ப. நோ. கூ. சங்கங்களுக்கும் வழங்கப்படவிருந்த உணவுப்பொருட்களில் 192,248 கிலோ மாவும் 70 சாக்கு அரிசியும் மனித பாவனைக்கு உதவாதெனசுகாதாரத் திணைக்கள உயர் வைத்திய உத்தியோகத்தர்களின் திடீர் சோதனையின்போது கண்டு பிடிக்கப்பட்டது.

பாவனைக்குதவாத இந்த உணவுப்பொருட்களை உடனடியாக மிருக உணவு தயாரிக்கும் சீதுவை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. (து)

## யாழ். திட்டமிடல் அதிகாரி

(யாழ்ப்பாணம்)

வவனியா மாவட்டதிட்டமிடல் அதிகாரி திரு. எஸ். சுவாமிநாதன் இம் மாதம் தொடக்கம் யாழ். மாவட்ட திட்டமிடல் அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திட்டச் செயல்படுத்தும் அமைச்சின் அவசரப்பணிப்பின் கீழ் இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். பொருளாதாரத்தில் சிறப்புப்பட்டம் பெற்ற இவர் சர்வதேச ஆராய்ச்சியில் மேற்பட்டம் பெற்றவருமாவார்.

இவர் கரணவாய் தெற்கு ஸ்ரீலஸ்ரீ செவ்வந்தி நாதக் குருக்கள் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பழையமாணவருமாவார். (இ)

### நீர்வையில் இன்று

## கார்த்திகைத் திருவிழா

(நீர்வேலி)

நீர்வேலிக் கந்தசுவாமி கோவிலில் கார்த்திகைத் திருவிழாவான இன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள், விசேஷ கச்சேரிகள், பிரசங்கம் முதலியன நடைபெறவுள்ளன. (அ)

## திவ்வியதரிசனம்

(யாழ்ப்பாணம்)

திருவருட்செல்வர் நடேசர் முத்தையா சுவாமி ள் இன்று கொழும்புத்துறை கிழக்கு சிறீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் அடியார்களுக்கு திவ்விய தரிசனமளிக்கவுள்ளார்.

## காலராவைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

(கொழும்பு)

திருகோணமலை, அம்பாறை, தம்புள்ள ஆகிய பிரதேசங்களில் காலரா நோயைக் கட்டுப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் சுகாதாரப் பகுதி சுறுசுறுப்பாக மேற்கொண்டு வருகின்றது.

இதற்குத் தேவையானமருந்து வகைகளையும், தேவையான சுகாதார அலுவலர்களையும் சுகாதாரப்பகுதி அப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்துத் தடுப்பு வேலைகளில் ஈடுபடுத்தியுள்ளது.

இப்பிரதேசங்களிலுள்ள நீர்ப்பாசன வாய்க்கால்களின் அசுத்தமான நீரை அருந்தியதாலே இந்நோய் பரவியதாக சுகாதார பகுதியினர் தெரிவித்துள்ளனர். இந்நோயினால் இதுவரை 17பேர் மரணம் அடைந்ததாகவும், 234 பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (து-அ)

### கோப்பாய்

## பொலிஸ் கான்ஸ்டபிளைக் காணவில்லை

(கொழும்பு)

கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் வீரதிலகாவை கடந்த மாதம் 30-ம் திகதியிலிருந்து காணவில்லையெனப் பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மத்திய பொலிஸ் கராஜில் இருந்து மோட்டார் சைக்கிளொன்றை எடுத்து வரச் சென்ற இவர் இன்னமும் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பவில்லையாம்.

கொழும்பு மத்திய பொலிஸ் கராஜில் மோட்டார் சைக்கிளைப் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

திடீரென மோட்டார் சைக்கிளுடன் காணாமல் போன பொலிஸ் கான்ஸ்டபிள் பற்றிய தகவல்கள் நாடுபூராவும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (து-ஈ)

### இம்முறை

## திருக்குறள் மாநாடு நயினாதீவில்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மறைக்கழகத்தின் 21-வது திருக்குறள் மகாநாடு அடுத்தமாதம் 18-ம், 19-ம் திகதிகளில் நயினாதீவில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டை நடத்துவதற்கான குழுவொன்று நேற்று தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் க.பொ. இரத்தினம் எம். பி. தலைமையில் நடந்த கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

அக்குழுவிபரம் வருமாறு: தலைவர்: பண்டிதர் நா. கந்தசாமி, உபதலைவர்கள் சி. நா. மதியாபரணம் வை. கணபதிப்பிள்ளை, செயலாளர் நா. சிவராசசிங்கம் துணைச் செயலாளர் க. உருத்திரகுமார் பொருளாளர் சி. சிவானந்தன்.

12 பேரைக்கொண்ட விழாக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தெரிவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கப் பொதுச்சபைக் கூட்டத்தில் தமிழர்விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த திரு. ஏ. பசுபதி இயக்குநராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (வ)


## I.C.M.A. & G.C.E. (A/L) COMMERCE COURSES IN JAFFNA

BY

The Centre for Development Research, Education and Communication

The Following Courses will Commence in May / June 1981

G. C. E. (A/L) Commerce - 1982 Exam

I. C. M. A (Foundation A & B & Prof. Part I) Nov. 1981 Exam

With work experience for selected Candidates

(Announcements regarding other courses to be started will be made later)

Location: Maniams Building, Sirambiady Lane, off Stanley Road, JAFFNA.

Closing dates for Applications:

G. C. E. (A|L) - 30-4-1981

I. C. M. A. - 30-5-1981

Prospectus and Application forms obtainable in person or by sending self-addressed and stamped envelopes to:

The Secretary,

D. R. E. C.

C/o Consultancy & Finance & Development Ltd

129, Temple Road, Jaffna. Tele: 8183

This centre is sponsored jointly by;

Consultancy and Finance and Development Ltd., and its President, Mr. C. Loganathan, Former General Manager, Bank of Ceylon, and Advisor, World Bank.

# "ஆசிரியர் பற்றுக்குறை நமது மாணவர்களைப் பாதித்துள்ளது"

(மாவிட்டபுரம்)

"ஆசிரியர் பற்றுக்குறை மாணவர்களது கல்வியைப் பாழடித்துவருகிறது. நமது எதிர்கால சந்ததியினரின் நன்மைகருதி ஆசிரியர் பற்றுக்குறைக்கு நாம் தீர்வுகாண வேண்டும்"

இவ்வாறு தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் கூறினார். பள்ளித்தலைமையாசிரியர் திரு. க. சிவநேசன் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இன்று தகுதிவாய்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் இங்கு சம்பளம் போதவில்லை என்று கூறி வெளிநாடு போகிறார்கள். இதனால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். "ரியூசன்" வகுப்புக்களை நாடவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே ஆசிரியர்களது கோரிக்கையை ஆராய்ந்து அதனை நியாயமாகக் கண்டால் சம்பள உயர்வு வழங்கி அவர்களை திருப்திப்படுத்துவதன் மூலம் அவர்கள் வெளிநாடு செல்வதைதடுக்கமுடியும்" என்றார்.

முன்னாள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு ஐ. பி துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

"மாணவர்கள் பாடசாலைகளில் நல்ல பண்புகளை பழக வேண்டும். இன்று மாணவர் பாடசாலைக்கு தாமதித்து வருவதையும், வீண் தொந்தரவுகளில் ஈடுபடுவதையும் காண முடிகிறது. இதனை பெற்றோரும் கவனிக்கவேண்டும். மாணவர்கள் நல்ல பிரஜைகளாகத்திகழ பாடசாலைகள் மட்டுமல்ல பெற்றோரும் உதவவேண்டும்" என்றார்.

கலைநிகழ்ச்சிகளும் நடந்தன.

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று பிற்பகல் 3 மணிக்குக் கூடுகிறது. பல முக்கிய சட்ட மூலங்கள் இன்றைய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (து-அ)

## உற்பத்தி முயற்சி

(கொழும்பு)

கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. செ. தொண்டமானின் பணிப்பின் பிரகாரம் சிறுகைத்தொழில் திணைக்களம் உயிர்வாயுவை உற்பத்திசெய்யும் முயற்சிகளில் ஈடுபடவிருக்கிறது. (து-அ)

## கோணேஸ்வரம் பூங்காவனத் திருவிழா

(திருகோணமலை)

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள திருக்கோணேஸ்வரம் ஆலயப் பூங்காவனத் திருவிழாவில் பண்ணிசைச் செல்வன் இரா. திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரியும் செல்வி புஷ்பமலர் முத்துக்குமாருவின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறவுள்ளன. இந்நிகழ்ச்சிகளில் செல்வன் செ. தாமபரனின் புல்லாங்குழல் கச்சேரியும் இடம்பெறவிருக்கிறது. (ஈ)

## நல்லை இசைவிழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றுவரும் யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 23வது தமிழ் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 5-45 மணி: அண்ணாமலை இசைக் கல்லூரி மாணவர் பாட்டு -வீணை

6-30 மணி; செல்வி. நவமணி நாகலிங்கம் - பாட்டு செல்வன். பா. கண்ணன் வயலின் செல்வி. ஜெயமணி ஐயாத்துரை - மிருதங்கம்.

7-45 - 9.00 மணி: திரு. ஏ. கே கருணாகரன் - பாட்டு திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி - வயலின், திரு. ஏ. சந்தானகிருஷ்ணன் - மிருதங்கம்.

# ஐ. தே. க. அரசே மீண்டும் பதவிக்கு வரும்!

## அமைச்சர் ராசதுரை நம்பிக்கை

(மட்டக்களப்பு)

"மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலிலும், அடுத்த பொதுத் தேர்தலிலும் நிச்சயம் ஐக்கிய தேசியக்கட்சி தான் வெற்றிவாகை பெற்று ஆட்சி செலுத்தும் இதனை எவராலும் தடுக்கமுடியாது ஜனநாயகம் உண்மையானது என்பதை மக்கள் இத்தேர்தல்கள் மூலம் நிச்சயம் நிரூபிக்கத்தான் போகின்றார்கள்.

இவ்வாறு மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை சிப்பிமடு எனுமிடத்தில் சுவர்ண ஹன்ச இயக்கத்தின் ஆதரவில் தச்சுத்தொழிற்பயிற்சி நிலையமொன்றை திறந்துவைத்து உரையாற்றுகையில நம்பிக்கை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இன்று நாட்டின் பல பகுதிகளும் அரசாங்கத்தால் அபிவிருத்திசெய்யப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில்தான் மட்டக்களப்பு பகுதியும் அபிவிருத்திசெய்யப்பட்டு வருகின்றது.

எனது காலத்தில் நான் என் தொகுதி மக்கள் ஆசைகள், எண்ணங்கள், திட்டங்களை பூர்த்திசெய்ய வேண்டுமென்ற ஆசை கொண்டுள்ளேன். இந்தக் காலத்தில் முடியாவிட்டாலும் அடுத்த பொதுத்தேர்தலின் பின் அவை நிறைவேற்றிவைக்கப்படும். இதற்கு காரணம் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம்தான் ஆட்சிபீடம்ஏறும்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் பகுதிகளில் ஐக்கிய தேசிய கட்சியின் செல்வாக்கு அதிகரித்துவருகின்றது. மக்கள் இதன்மேல் நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டுள்ளார்கள் என்றார்.




## இன்றைய பலன்

பங்குனி மாதம் 25-ம் திகதி செவ்வாய்க்கிழமை (7-4-81)

மேடம்; இலட்சியக் கனவுகள் இன்று கானல் நீராகலாம் பின்னணியில் சிலவுக்கு இடமேற்படும். உணர்ச்சி வசப்படாதிருந்தால் எதிர்பாராதவிளைவுகள் ஏற்படும், எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

இடபம்: புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள். இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்துக்குச் சிறந்த பலனை அளிக்கும் களஸ்திரவழியாலும் நன்மைகள் சேர்வதற்கு இடமுண்டு வரவேற்க வேண்டிய தினம்.

மிதுனம்: செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும் நண்பர்களின் தொல்லைகளினால் நஷ்டம் அடைவீர்கள் தொழில்புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

கடகம்; வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவங்கள் இடம் பெறும் வாகன விருத்திக்கு இடமுண்டு. நீர்ப்பாசனப்பகுதியில் கடமை பார்ப்பவர்களுக்கு சிறப்பான தினம் கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

சிங்கம்: மற்றவர்களின் இன்னல்களை கண்டு இரக்கம் காட்டுவீர்கள் தாராளமான குணத்தின் மூலம் தனமும் செலவாகும். புண்ணிய யாத்திரை உண்டு.

கன்னி: புதிய எண்ணங்கள் தலைதூக்கும் சுற்றாடலில் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு அழுகுப்பார்வை செலுத்தியவர்கள் கைகொடுத்து உதவுவார்கள். அவசரச் செய்தியொன்று சிந்தனையைத் தூண்டும்.

துலாம்; தாம்பத்திய வாழ்க்கையில் தனிச்சிறப்பும் காணப்படும். பெரியவர்களின் உதவி உங்களுக்குத் தப்பாமல் கிடைக்கும். பிரிந்த குடும்பங்கள் மீண்டும் இணைவதற்கான சந்தர்ப்பமுண்டு.

விருச்சிகம்: செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும். சதி செய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர் பிரயாணத்தைத் தவிர்க்கவும் இறை நம்பிக்கை நன்று.

தனு: பிறருக்கு உதவுவதில் முனைந்திருப்பீர்கள் இதன் மூலம் பணமும் செலவாகும் அரசியல் வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்

மகரம்: பதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் தொழில் துறையில் புதிய சாதனை உருவாகும் கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும் வீட்டை மாற்றத்தக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்: இடைப்படுதலில் இன்பக்கூத்து வாழ்க்கை சௌகரியங்கள் நிறைந்ததாக இருக்கும். கற்றதனால் பயன் ஒன்று கைமேல் கிடைக்கும் நுட்பப் வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

மீனம்: எதிலும் மந்தநிலை தென்படும் சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம். விவசாயிகள் வாழ்க்கையில் நஷ்டத்துக்கு இடமுண்டு சிந்தனை குழப்பத்தில் சிக்கித் தவிப்பீர்கள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## திருமுறை இன்னிசை

(மல்லாகம்)

தெல்லிப்பழை-ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய யாகுபாபிஷேக விழாவில், திருமுறை இன்னிசை வழங்குவதற்காக, தமிழகம்- திருப்பனந்தாள் தேவார இசைவல்ல அரசு திருச்சி எஸ். முத்துக்கந்தசாமி தேசிகர், இம்மாதம் 13ம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். (ஈ)

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**WINTER KILLS**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி ஆர் -சரோஜாதேவி
**பெரியஇடத்து பெண்**

திசை மாறும் 9 வது வெற்றிவாரம்!
மகளிர்க்கு ஏற்றது இதுவே கடைசிவாரம்!!
**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
**திசைமாறிய பறவைகள்**
(ஈஸ்மன் கலர் திரைபோவியம்)


**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10 30, 2-00 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
நடித்த
**பட்டாக்கத்தி பைரவன்**
(வண்ணப்படம்)

**ராணி** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
4-வது ஜுவாலை வீசும் வாரமாக,
★ ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
**தீ**
இலங்கை-இந்திய தயாரிப்பு

**மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
**கவரிமான்**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரிகாலை 10-30,பி.ப.2-00, 6-00, 9-30
சிவகுமார் - ஜெய்சித்ரா
**சொல்லத்தான் நினைக்கிறேன்**
10-ந் திகதி முதல் புத்தாண்டு வெளியீடு!
சிவாஜி - கே. ஆர். விஜயா
**ரிஷி மூலம்**

**ராஜா** யாழ்ப்பாணம் **சாந்தி** மட்டுநகர்
தினசரி 4 காட்சிகள் தினசரி 1-30, 5 00, 9-30



● பாக்கியராஜ் ● ரதி ● சத்ரி
**புதிய வார்ப்புகள்**
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை: இளையராஜா

தலைமன்னார்க் கடலில்

# ரூ. 2 லட்சம் கடத்தல் பொருள்கள் சிக்கின!

(மன்னார்)

சல்குலேட்டர், கசெற்றுகள், ரேப்றைகோடர்கள் போன்ற பொருள்களடங்கிய சுமார் 2லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை கடற்படையினர் கைப்பற்றினர்.

இச்சம்பவம் தலைமன்னார் கடலில் இடம்பெற்றது.

தலைமன்னார்கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காரைநகர் கடற்படையினர் கடத்தல் படகு ஒன்றை சந்தேகத்தின் பேரில் விரட்டியதாகவும் கடத்தல் காரர்கள் கடத்தல் பொருட்களை வீசி விட்டுத் தப்பிச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தல் காரர்களால் வீசப்பட்ட பொருட்களைக் கைப்பற்றிய காரைநகர் கடற்படையினர் கடத்தல் பொருட்களைச் சுங்க அதிகாரியிடம் ஒப்படைத்தனர். (அ)

## அரியாலை சனசமூக நிலையம் வெற்றி

(அரியாலை)

நல்லூர் உதவி அதிசாங்க அதிபர் பிரிவில் விளையாட்டுக் கழகங்கள் சனசமூக நிலையங்களுக்கிடையிலே நடைபெற்ற உதைபந்தாட்டம், வலைப் பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் அரியாலை சன சமூக நிலையம் சாம்பியனாகத்தெரிவு செய்யப் பட்டுள்ளது.

**உதைபந்தாட்டம்**

எட்டுக்கழகங்கள் பங்கு பற்றிய உதைபந்தாட்டப்போட்டியில் முன்னணியில் விளங்கிய அரியாலை சனசமூக நிலையமும், கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகமும் கலந்து கொண்ட இறுதிப்போட்டியில் அரியாலை சன சமூக நிலையம் 5:2 கோல்களால் வெற்றியீட்டியது. அரியாலைசனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற போட்டிக்கு திரு.ரி.சண்முகராசா [மத்தியஸ்தம்] வகித்தார்.

**வலைப்பந்தாட்டம்**

நான்கு கழகங்கள் பங்கு பற்றிய போட்டியில் இறுதி ஆட்டத்தில்யாழ்பல்கலைக்கழக கோஷ்டியை அரியாலை சனசமூக நிலையக் கோஷ்டி 28:6 என்ற புள்ளியடிப்படையில் தோற்கடித்தது, இப் போட்டி பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

## எரிகாயத்திற்கு உள்ளானார்

(மன்னார்)

குளிர் சாதனப்பெட்டியின் மண்ணெண்ணெய்விளக்கு (பேணர்)வெடித்ததால் ஒருவர் பலத்த எரிகாயங்களுக்குள்ளானார்.

இச்சம்பவம் பேசாலையில் இடம்பெற்றது. பேசாலையைச் சேர்ந்த எல்மோ பீரிஸ் என்பவரே எரிகாயங்களுக்குள்ளானவராவார்.

குளிர் சாதனப்பெட்டியை இயங்கவைத்துக் கொண்டிருந்தபோது குளிர்சாதனப் பெட்டியின் மண்ணெண்ணெய் விளக்கு வெடித்ததால் உடல் தீப்பிடிந்தது. பொதுமக்களின் உதவியுடன் தீயணைக்கப்பட்டு பலத்த காயங்களுடன் மன்னார் அரசினர் ஆதார வைத்திய சாலையில் அவர் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

**நாகம்ஸ்** (கல்லுண்டாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். -சரோஜாதேவி
**பணத்தோட்டம்**
(மறுபிரதி)

**வெஸ்லி** (பருத்தித்துறை)
தினசரி 6-15, 9-30;
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—சுஜாதா
**தீபம்**
(புதியபிரதி-ஈஸ்மன் கலர்)

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
மகத்தான 2-வது வாரம்
ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
**முள்ளும் மலரும்**
போன்:381 (கலர்)

## சங்கரத்தை வைரவநாதன்

சிக்கல் நிறைந்த பிரச்சினைகளை நிதானமாக அவிழ்க்கும் ஆற்றலும், தன்னை எதிர்ப்பவர்களுடனும் பெருந்தன்மையாகப் பழகும் பண்பும், தன் எடுத்துக்கொண்ட முயற்சிகளை ஆரவாரமின்றி அமைதியாக ஆனால் வெற்றிகரமாக முடிக்குந்திறனும், வீணைபேச்சிலேயன்றிச் செயல்மேலேயின் ஆற்றலைக்காட்டும் சிறப்பும் சமூகத்தொண்டன் க. வைரவநாதனிடம் இயல்பாகவே அமைந்திருந்தன. இளமை வேகமும் துடிப்பும் விரைவில் உணர்ச்சிவசப்படும் தன்மையும் கொண்ட இளைஞர் சமுதாயத்தை அவர் நலவழிப்படுத்தியமைக்கு சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் நல்லதொரு எடுத்துக்காட்டு.

மூன்கோபமும் அவசர முடிவெடுக்கும் துடிப்பும் கொண்ட இளைஞர்களைச்சார்தப் படுத்தி தன்னுடைய வழியில் நடத்திச் செல்லும் அபாரத்திறமை அவருக்கு நிறைந்திருந்தது. அந்தத்திறமை இருந்ததனால் தான் இளைஞர்களின் சக்தியை ஒன்றுபடுத்தி சிறந்த பல சாதனைகளை அவரால் நிலைநாட்ட முடிந்தது. மன்னித்தே மற்றவர்களின் தவறுகளை உணரச்செய்யும் அவரின்பேராற்றல் தனித்துவமானது மாணவர்களைக்கவரும் ஓர் அபூர்வ சக்தி அவரிடம் நிறைந்திருந்தது அவர் மறைந்து இன்று ஒரு மாதமாகிறது.

அமரர் வயிரவநாதனைச் சங்கரத்தை இந்து வாலிபர் சங்கம் எமக்கு ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கும் "ஆடவல்லானின் ஆட்டம் முடிந்தாலும் அவன் எம் நெஞ்சிலிருந்து என்றும் அகலான."

— க. சிதம்பரநாதன்
(சங்கரத்தை,
இந்து வாலிபர் சங்கச்
செயலாளர்)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியதபால் அலுவலகத்தில் கடமையாற்றிய செல்வன் த. இளங்கோதாசன் இம்மாதம்முதல் யாழ்ப்பாணம் தபால் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். (சுழி-தி)

## பரி.யோவான்-மத்.கல்லூரி போட்டி

(அரியாலை)

யாழ்.மத்தியகல்லூரி, யாழ். பரி.யோவான் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான 15வயதுப் பிரிவினர்களுக்கான கூடைப் பந்தாட்டப்போட்டியாழ் பரி யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

பரி யோவான் கல்லூரிக் கோஷ்டி 32;29 புள்ளிகளால் மத்தியகல்லூரிக்கோஷ்டியைத் தோற்கடித்தது. பரி.யோவான் கல்லூரிக்கோஷ்டியில் விளையாடிய செல்வன் ஆர். பார்த்திபன் 144 புள்ளிகளைத்தனது கோஷ்டிக்குப் பெற்றுக்கொடுத்தார் திருவாளர்கள் கபிரியல் பிள்ளையும், தப்புவும் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

பருவட்டார

## மெய்வல்லுநர் போட்டியில் ஹாட்லி முதலிடம்

(புலோலி)

பருத்தித்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது உடற்பயிற்சி வட்டாரக் கல்வியதிகாரி திரு.வி. கணேசலிங்கம் வட்டாரக் கொடியை ஏற்றிப் போட்டியை ஆரம்பி த்துவைத்தார்.

13 வயது ஆண்களுக்கான போட்டியில் ஹாட்லிக்கல்லூரி முதலாவது இடத்தையும் தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயம் இரண்டாவது இடத்தையும் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் மூன்றாவது இடத்தையும் 13 வயது பெண்களுக்கான போட்டியில் வட இந்து மகளிர் கல்லூரி முதலாவது இடத்தையும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி இரண்டாவதுஇடத்தையும் சென் தோமஸ் றோ. க.பாடசாலை மூன்றாவதுஇடத்தையும் பெற்றுக் கொண்டன.

17 வயது ஆண்களுக்கான போட்டியில் ஹாட்லிக் கல்லூரி முதலாவது இடத்தையும், புற்றளை மகாவித்தியாலயம் இரண்டாவது இடத்தையும், சித்திவிநாயகர் வித்தியாலயம் மூன்றாவது இடத்தையும் 17 வயது பெண்களுக்கான போட்டியில் வட-இந்து மகளிர் கல்லூரி முதலாவது இடத்தையும், மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி இரண்டாவது இடத்தையும், சித்திவிநாயகர் வித்தியாலயம் மூன்றாவது இடத்தையும்பெற்றுக் கொண்டன.

இப் போட்டிகளில் 24 பாடசாலைகள் பங்கு பற்றின (அ)

## சாராயம் விற்ற 3 பெண்களுக்கு அபராதம்

(புலோலி)

சட்டவிரோதமாகச் சாராயம்விற்ற மூன்று பெண்களுக்குப் பருத்தித்துறை நீதவான் தலா 50ரூபா அபராதம் விதித்தார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த இம் மூன்று பெண்களும் சட்டவிரோதமாகச்சாராயம் விற்ற போது பருத்தித்துறை மதுவரி உத்தியோகத்தர்களிடம்சிக்கிக் கொண்டனர்.

இம் மூன்று பெண்களும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். நீதவான், அவர்களுக்குத்தலா 50 ரூபா அபராதம் விதித்தார். (அ)

## காணி விற்பனை

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில், சிவலிங்கப் புளியடி வீதியில் குடியிருப்பதற்கு ஏற்ற ஒன்றரைப் (1 1/2) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

விபரங்கட்கு:
ந. சுந்தரம்பிள்ளை,
30, கடைச்சாமி வீதி.
நீராவியடி, யாழ்ப்பாணம். 8779



# ஈழநாடு
The Eelanaadu
60 சதம்



டில்கா

ரேடியோ அன் ரீ.வி டெக்னீஷியன்ஸ் பஸ்நிலையம் எதிர்மேல்மாடி

உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோட்டர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவானாலும்
உடன்சீரமைத்துக் கொள்ள,

202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## வானொலி பரிசு பெற்றார்

(மன்னார்)

பிலிப்பைன்ஸ் நாட்டு வெரித்தாஸ் வானொலி கடந்த பெப்ரவரி மாதம் நடத்திய 'ஆன்மீக வளர்ச்சிக்கு தானம், தவம்' ஆகியவற்றின் அவசியம்' என்ற தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் பேசாலை கிராமாட்சிமன்ற பிரதம எழுதுவினைஞர் திரு. ஜி. செல்வநாயகம் 4-வது இடத்தைப் பெற்றுள்ளார்.

# "வெளிக்கள ஆய்வுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும்"

## கருத்தரங்கில் பேராசிரியர்கள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்).

"இலங்கையில் வாழும் மக்களில் 75 சத விகிதமானவர்கள் கிராமங்களிலும் தோட்டங்களிலும் வாழுகின்றார்கள். வளாமு நாடுகளிலும் இந்த நிலையே காணப்படுகின்றது இலங்கை போன்ற வளர் முகநாடுகளின் முன்னேற்றம் கிராமமட்டத்திலேயே தங்கியுள்ளது"

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையும் இலங்கை மன்றக் கல்லூரியும் தொண்டைமானாறு வெளிக்கள ஆய்வு நிலையத்தில், "இலங்கையை சிறப்பாகக் கருத்தில்கொண்ட கிராமசமுதாய அபிவிருத்திக்கான உபாயங்கள்" எனனும் கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறினர்.

பேராசிரியர் டபிள்யூ. எல். ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது!

"இலங்கை மன்றக்கல்லூரி இத்தகைய ஆராய்ச்சிகளை நடாத்திவருவது வரவேற்கத்தக்கது கிராம அபிவிருத்தி, தொழில்நிலையங்கள் என்பன பற்றி இலங்கை மன்றக் கல்லூரியில் இதேபோல ஆய்வு இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது. கிராம மக்கள் மட்டத்தில் மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற எத்தகையமுறையில் செயல்படலாம் என்பதுபற்றி ஆராய்ச்சி நடத்தவேண்டியது முக்கியமாகும்" என்றார்.

பேராசிரியர் கே. கைலாசபதி இக்கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறியதாவது!

"ஆய்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்ற கருத்து பல்கலைக்கழகங்களில் தற்போது ஏற்பட்டுள்ளது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் நடைமுறைப்பயிற்சி சிறப்பாக நடைபெறுகின்றது. நமது நாட்டுப் பல்கலைக்கழகங்களில் நடைமுறைப்பயிற்சி சிறப்பாக நடைபெறுவது குறைவு. வெளிக்கள ஆய்வுக்கு உயர்கல்வியிலும் பல்கலைக்கழகங்களிலும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பாடமுறைப்பாக நோக்காமல் வெளி உலகத்தைநோக்குகின்ற படிக்கட்டை வாய்ப்பாக இதனைக் கருத்திற்கொள்ளவேண்டும்" என்றார்.

பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை இக்கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறியதாவது:

"புவியியல் துறையில் வெளிக்கள ஆய்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இலங்கை ஒரு விவசாய நாடு. பொருளாதார அமைப்பில் கிராமிய விவசாயத்தை அடிப்படையாகக்கொண்டுள்ளது. உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி கிராமப்புறங்களை பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடையச் செய்வதற்கு எவ்வாறு செயல்படலாம் என்பதைப்பற்றிசிந்திக்க வேண்டும். இலங்கையில் அரசாங்கங்கள் மாறி மாறி ஆட்சிக்கு வருவதனால் கிராமப் புறத்திலுள்ள சிறுகைத்தொழில்நிலையங்கள் பாதிப்படைந்துள்ளன. கல்விஅறிவு எமது நாட்டில் கூடுதலாக இருப்பதனால் தொழில்நுட்பங்களை கையாளக்கூடிய ஆற்றல் பொதுமக்களுக்கு இருப்பதாகத் தெரிகின்றது. எமது நாட்டைமாகாணரீதியாகவா, மாவட்டரீதியாகவா, தொகுதிரீதியாகவா அபிவிருத்தியை மேற்கொள்ளலாம் என்பது பற்றி ஆராய்ச்சிசெய்யவேண்டும் கல்வி, விவசாயம், மீன்பிடி என்று தரம்பிரித்து அபிவிருத்தியை மேற்கொள்ளலாமா? என்பன பற்றியும் ஆராய்ச்சியை மேற்கொள்வது அவசியம் என்றார். (சி)

## வெளிநாட்டில் தனி இயக்கம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நீர்வேலி 82 லட்சம் வங்கிக் கொள்ளையிலும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொலைச்சம்பவத்திலும் இவர்களுக்கு நேரடித்தொடர்பில்லையென்றும், ஆனால் இச்சம்பவத்திற்கு இவர்கள் பக்கபலமாக இருந்து அதனை நடத்தி முடித்தார்கள் என்றும் புலன் விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸ்வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

### 'செட்டி' கொலைச்சம்பவம்

திருநெல்வேலியைச் சேர்ந்த தனபாலசிங்கத்தின் (செட்டி) கொலைச்சம்பவத்தில் இவர்களில் ஒருவர், ஒரு நபரின் அடையாளத்தை வெளிக்காட்டினாரென்றும், மற்றொரு இளைஞரே சுட்டதாகவும் அவரின் விபரம் தெரியுமென்றும் மேலும் பொலிஸ்வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது

### திருநெல்வேலி கொள்ளை

திருநெல்வேலி மக்கள் வங்கி கிளையில் 12 லட்சம் ரூபா கொள்ளை, இவர்களது கண்காணிப்பிலேயே நடந்துள்ளதாகவும் புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது.

### இன்ஸ்பெக்டர்கள் குமார், பத்மநாதன் கொலைச்சம்பவம்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் குமாரின் கொலைச்சம்பவத்தில் இவர்களில் ஒருவருக்கு நேரடித் தொடர்பு இருந்தது என்றும், மற்றொரு இளைஞரே அவரைக் கொலை செய்ததாகவும் புலன்விசாரணையில்தெரியவந்துள்ளதாவும் பொலிஸ்வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைபற்றி இவர்களுக்கு தெரியுமென்றும் புலன் விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

### குரும்பசிட்டி நகைக்கொள்ளை

குரும்பசிட்டி அடைவு கடைகொள்ளை இவர்கள் கண்காணிப்பில் நடந்ததாகவும், நேற்று முன்தினம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 102 பவுண் நகைகள், அந்தக் கொள்ளையில் ஒரு பகுதியே எனவும் புலன் விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. (க)

கோப்பாய் எம். பி:

## நாகராசா விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்த்தொகுதி எம். பியாக தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தம்மைத் தெரிவு செய்யுமாறு முன்னாள் யாழ் மேயரும், உரும்பராயைச்சேர்ந்தவருமான சட்டத்தரணி திரு. சி. நாகராசா கூட்டணி தலைமைப் பீடத்துக்கு விண்ணப்பம் செய்யவிருக்கிறார்.

கோப்பாய்த் தொகுதியைச் சேர்ந்த உரும்பராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன் மற்றும் கிராமங்களைச் சேர்ந்த பல ஆதரவாளர்கள் விண்ணப்பம் செய்யுமாறு அவரிடம் நேரில் கோரியுள்ளதுடன் தலைமைப் பீடத்தையும் கேட்டுள்ளனர். இது பற்றி நமது நிருபர் நேற்றிரவு திரு. சி. நாகராசாவிடம் கேட்டபோது தான் விண்ணப்பிக்கவிருப்பது உண்மைதானென்றும், கூட்டணி ஆதரவாளர் பலர் தன்னை விண்ணப்பிக்குமாறு வலியுறுத்திவருவதாகவும் கூறினர். (க)

## மேயர்கூட்டும் பத்திரிகையாளர் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மகாநாடொன்றை யாழ் நகரமுதல்வர் திரு. ஆர். விஸ்வநாதன் இம்மாதம் 10ம் திகதி காலை கூட்டுகின்றார்.

இம் மாநாட்டில்சபையின் திணைக்களத் தலைவர்களும் கலந்துகொள்வார்கள்.

சபைபதவியேற்ற 79 ஜூன் 1ம் திகதி முதல் 81 மார்ச் 31ம்திகதி வரை சபையால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள், சேவை முன்னேற்றங்கள் பற்றி இம் மாநாட்டில் தெரிவிக்கப்படவிருக்கிறது. (அ)

## நகுலேஸ்வரம் உற்சவம் நாளை ஆரம்பம்

(கீரிமலை)

கீரிமலை நகுலேஸ்வர ஆலய தேவி மகோற்சவம் நாளை புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நிகழும் தினமும் காலை 8 மணிக்கும் மாலை 7 மணிக்கும் வசந்தமண்டப பூசையாகி திருவிழா நடைபெறும்.

17ம் திகதி சப்பரத்திருவிழாவும் 18ம் திகதி தேர்த்திருவிழாவும் 19ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் (அ)

## சாரணர் சின்னம் சூட்டும்விழா

(மல்லாகம்)

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய சாரணர் சின்னஞ் சூட்டும் விழா பாடசாலை அதிபர் திரு சு. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றபோது மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. ஆர். விசுவநாதன் கொடி ஏற்றி வைத்தார். சாரணர்கள் பாடசாலைக் கீதம்பாடினர் பாடசாலைச்சாரண ஆசிரியர் திரு. செ. ஆனந்த ஈஸ்வரன் வரவேற்புரையாற்றினர். (ஈ)

## பொலிஸாருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### பொலிஸ் நிலையத்தில் விசாரணை

மற்றும் இருசந்தேகநபர்களான தேவன், தங்கத்துரை ஆகியோர் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

### புதியதகவல்கள்

விசாரணையின்போது கிடைத்த புதிய தகவல்களைத் தொடர்ந்து பொலிஸார் மேலும் சில சந்தேக நபர்களை தேடிவருவதாகத் தெரியவருகிறது. (க)

## யாருடையது?

யாழ். செனிபற்றிக்ஸ் வீதியைச்சேர்ந்த பாலா என்பவரால் கண்டெடுக்கப்பட்ட இரண்டு கணக்கு விபரக் கொப்பிகளும் வீட்டுக்கட்டிட வரைபடங்களும் "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளலாம்.


## விற்பனைக்கு

கந்தஉடையார் ஒழுங்கை பருத்தித்துறையில் 6 பரப்புடன் கூடிய மாடி வீடு ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. சத்தியமூர்த்தி, கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை (8809)


# மேலும் 2 இளைஞர்கள் கைது!

## குட்டிமணி, தங்கத்துரை, தேவன்

## கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் இரு இளைஞர்களை பருத்தித்துறை கடற்கரைப் பகுதியில், கடற்படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர்.

சந்தேகநபர்களான ஞானராசா, சிவகுரு ஆகிய இருவரையும் கடற்படையினர், காரைநகர் முகாமிற்கு கொண்டுசென்றுள்ளனர்.

மூன்று இளைஞர்கள் கைது செய்ப்பட்டு நடந்த விசாரணையைத் தொடர்ந்து இவ்விரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

### சந்தேகநபர்கள் கொழும்புக்கு

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான குட்டிமணி, தங்கத்துரை. தேவன் ஆகியோர் நேற்றுமாலை விசேட விமானப் படை விமானத்தில் விசாரணைக்காக கொண்டுசெல்லப் பட்டனர்.

வடபிராந்தியபிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. பி. மகேந்திரனும், உதவி பொலிஸ் அதிபர் ஜனப் நிஸாமும் கொழும்பு சென்றுள்ளனர்.

யாழ். பெரியாஸ்பத்திரியில் நேற்று பிற்பகல்வரை சந்தேக நபரான குட்டிமணி விசாரணைக்குட்படுத்தப்பட்டார். (க)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] ... ஏப்பிரல் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. QJ/[illegible] The Eelanaadu [illegible] 43. Telegram "Eelanaadu" Phone: [illegible]